இனிமையான குழந்தைகளே!. நீங்கள் தந்தையை நினைவு செய்வதற்கான ரேஸ் (பந்தயம்) செய்ய வேண்டும். தந்தையை மறந்துவிட்டீர்கள் என்றால் மாயை குண்டு வீசிவிடும்.

கேள்வி: இந்த நாடகத்தின் எந்த ஆழ்ந்த இரகசியத்தை குழந்தைகளாகிய நீங்கள் மட்டும் அறிந்திருக் கிறீர்கள்?

பதில்: 1. இந்த நாடகத்தில் விதவிதமான நடிகர்கள் உள்ளனர். ஒவ்வொருவருடைய நடிப்பும் தனித் தனியானது. ஒருவருடைய நடிப்பு, ஒருவருடைய தோற்றம் மற்றொருவருடையதைப் போல் இருக்காது. யார் ஆல்ரவுண்டர் ஹீரோ நடிகர்களாக இருக்கின்றார்களோ, அவர்களுடைய மகிமையே பாடப்படுகிறது. மற்றபடி, யார் சிறிது நேரத்திற்காக ஒன்று, இரண்டு பிறவிகளுடைய நடிப்பு நடிக்கிறார் களோ அவர்கள் பலஹீனமான நடிகர்கள் ஆவார்கள். 2. அனைத்து நடிகர்களுக்குள்ளும் பரமாத்மா வியாபித்து தனியாகவே நடனம் (நடிப்பு) ஆடுவதில்லை. அவரோ இந்த எல்லையற்ற நாடகத்தின் இயக்குனர் ஆவார். அவர் பெயர், உருவம் அற்றவர் கிடையாது. ஒருவேளை, பெயர், உருவம் அற்றவராக இருக்கின்றார் என்றால் உங்களுடைய புத்தி, வழியை நீங்களே அறிவீர்கள் என்ற இந்த மகிமை தவறானதாக ஆகிவிடும்.

ஓம்சாந்தி. நான் சாதாரண வயோதிக உடலில் வருகின்றேன் அதாவது அவர் வானப்பிரஸ்த நிலையில் இருக்கும் சமயத்தில் நான் வருகிறேன் என்று பாபா கூறியிருக்கின்றார். வானப்பிரஸ்தம் என்றால் சப்தங்களைக் கடந்த உலகம் என்பதாகும். அது நிர்வாணதாமம் ஆகும். சுகதாமம், துக்கதாமத்தில் மனிதர்கள் வாழ்கின்றனர். சுகதாமத்தில் மனிதர்கள் வாழ்கின்றனர். அங்கே அவர் களுக்கு சுகம் கிடைக்கின்றது. எனவே, பெயரே சுகதாமம் என்று வைக்கப்பட்டிருக்கின்றது. தாமம் என்றால் அதில் யாராவது வசிப்பார்கள். நல்லது. பிறகு, சாந்திதாமம் என்று கூறுகிறார்கள். அங்கேயோ மனிதர்கள் வசிப்பதில்லை. சாந்திதாமம் என்று சொல்வதால் அங்கே ஆத்மாக்கள் இருக் கின்றனர் என்பது நிரூபணம் ஆகிறது. அங்கே மனிதர்கள் இருக்க முடியாது. மனிதர்கள் சத்யுகத்தில் சாந்தியாக இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் குகைக்குள் இருக்கிறார்கள் அல்லது மனதை அமைதி ஆக்கிவிடு கிறார்கள் என்பது கிடையாது. அங்கேயோ ஒரே ஒரு (அத்வைத) தர்மம் இருக்கிறது, துவைதம் (இரண்டு) என்பதற்கான விசயமே கிடையாது. பிறகு, தர்மங்கள் அதிகரிக்கும்பொழுது பிரிவினை அதிகரிக்கின்றது. எங்கே துவைதம் இருக்கிறதோ அங்கே அசாந்தி இருக்கிறது. நிர்வாண தாமத்தை வானப்பிரஸ்தம் என்று சொல்லப்படுகிறது. ஆத்மாக்களாகிய நம்முடைய இருப்பிடம் நிர்வாணதாமம் ஆகும் என்பது குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். அதை முக்திதாமம் என்றும் கூறப்படுகிறது. அங்கே சாந்தியாக ஆத்மாக்கள் மட்டும் இருக்கின்றன. சுகதாமத்திலோ சரீரமும் உள்ளது அல்லவா! சரீரத்துடன் இருக்கும்பொழுது ஒருபொழுதும் சாந்தியாக இருக்கமுடியாது. ஹடயோகம், பிரணாயாமம் போன்றவை செய்துகொண்டு 10, 20 நாட்கள் அல்லது மாதங்கள் கூட இருக்கின்றனர். ஆனால், எந்தளவிற்கு சாந்தியில் இருக்கின்றனர்? முக்தி, ஜீவன் முக்திக்குச் செல்ல முடியாது. இது நாடகம் அல்லவா! இந்த சமயத்தில்

அனைத்து ஆத்மாக்களும் கர்மஷேத்திரத்திற்கு வந்தாக வேண்டும். ஏனெனில், வரிசைக்கிரமமாக வந்துதான் ஆக வேண்டும். ஆத்மாக்கள் கூட வரிசைக்கிரமமாக உள்ளனர் அல்லவா! சிலர் சதோபிரதானமாக உள்ளனர், சிலர் சதோ, ரஜோ, தமோவாகவும் உள்ளனர். யார் இறுதியில் சிறிய பாகம் ஏற்று நடிக்கிறார்களோ அவர்கள் பலஹீனமான ஆத்மாக்கள் ஆவார்கள். முற்றிலும் சிறிய நடிப்பே உள்ளது. அவர்களுடைய பிரபாவம் அந்தளவிற்கு ஏற்படாது, அந்தளவிற்கு மகிமை செய்யப் படமாட்டார்கள். யார், யார் மகிமை செய்யப்படுகிறார்கள் என்பதை சிந்தனை செய்யுங்கள். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான் ஆவார். பாரதத்தினுடைய விசயம் ஆகும். இரண்டாவதாக யாருடைய மகிமை செய்யப் படுகிறது? தர்ம ஸ்தாபகர்களுடைய மகிமை. முதலில் கிறிஸ்து, பிறகு, போப் வருகின்றார், அவர்களுடைய சித்திரங்கள் கூட உள்ளன. எந்த ஆத்மாக்களுடைய மகிமை செய்யப்படுகிறதோ, அவர்களுடைய நடிப்பு உயர்ந்ததாக உள்ளது. குழந்தைகளாகிய நீங்கள் சிருஷ்டியினுடைய முதல், இடை, கடை நிலையைப் பற்றி அறிந்துகொண்டீர்கள். நாடகத்தில் எத்தகைய முதல்தர நடிகர்களாக உள்ளனர்! செய்தித்தாள்களில் கூட வெளியிடு கின்றனர். அப்பொழுது இன்னாரைப் பார்க்க வேண்டும் என்று மனிதர்களுக்கு ஈர்ப்பு ஏற்படுகிறது. இது எல்லையற்ற 5 ஆயிரம் ஆண்டுகளுக்கான நாடகம் என்பது யாருக்கும் தெரியாது. வெளிநாட்டினர் கூட மிகவும் பொய்யான விசயங்களைக் கூறுகின்றனர். அனைவரையும் விட இங்கே உள்ளவர்கள் அதிகமாகப் பொய் சொல்கின்றனர். எனவே, தந்தை வந்து நமக்கு முழு ஞானம் அளிக்கின்றார். உங்களுடைய புத்தியில் இது அவசியம் தங்கவேண்டும். முக்கியமாக படைப்பாளர், இயக்குனர், முதன்மை நடிகர் யார்? சிவபாபா. அவரே ஞானம் நிறைந்தவர், ஆனந்தக்கடலானவர் ஆவார். நாம் சிவபாபாவை நடிகர் என்றும் கூறமுடியும். அவர் ஒருபொழுதும் நடிப்பு நடிப்பதே இல்லை, அவர் பெயர், ரூபத்திற்கு அப்பாற்பட்டவர் ஆவார் என்று மனிதர்கள் கூறுவார்கள். பிறகு, அவர் சர்வவியாபி என்று கூறுகின்றனர் எனில், அந்த ஒரு நடிகர் மட்டும் அனைவருக்குள்ளும் நடனம் ஆடுகின்றாரா என்ன? இல்லை. ஒவ்வொருவருடைய நடிப்பும் தனித்தனியானது. ஒருவருடையது இன்னொருவருடையதைப் போன்று இருக்காது. எத்தனை அனேக மனிதர்கள் உள்ளனர்? ஒருவருடைய தோற்றம் போல் இன்னொருவருக்கு இருக்க முடியாது. இந்த உலக நாடகம் முன்பு போல் அப்படியே திரும்ப நடக்கிறது என்பதை குழந்தைகள் அறிந்திருக்கிறீர்கள். மீண்டும் கீதை ஞானத்தை கூற வேண்டியதாக ஆயிற்று என்று உங்களிடம் பாடல் கூட உள்ளது. தந்தை கூறுகின்றார் - உங்களுக்கு நான் எவ்வளவு உயர்ந்த ஞானம் அளிக் கின்றேன்! நாம், நீங்கள் மற்றும் முழு உலகமும் இப்பொழுது இருக்கிறோம், கல்பத்திற்கு முன்பும் இருந்தோம். பிறகு, கல்ப கல்பம் சந்தித்துக்கொண்டே இருப்போம். வேறு எந்த உலகமும் கிடையாது. நான் ஒருவர், எனவே, படைப்பும் ஒன்று தான் என்று தந்தை கூறுகின்றார். கடவுள் ஒருவரே. வேறு பெயர், அடையாளம் கிடையாது. ஒரே ஒரு சிவபாபா மட்டும் தான் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் ஆவார். பிறகு, திருமூர்த்தி பிரம்மா என்று கூறுகின்றனர். மும்மூர்த்தி என்ற வார்த்தையை பிரம்மாவுடன் அதிகம் இணைத்துச் சொல்கின்றனர். மும்மூர்த்தி சங்கரர் என்று சொல்லமாட்டார்கள். தேவ தேவ மகாதேவர் என்ற மகிமை செய்யப்படுகின்றது. முதலில் பிரம்மா வருகின்றார். இந்த மூன்று தேவதைகளில் முதல் எண்ணில் இருப்பவர் பிரம்மா ஆவார். பிரம்மாவையே குரு என்று கூறுகின்றனர். சங்கரரையோ அல்லது விஷ்ணுவையோ

ஒருபொழுதும் குரு என்று சொல்ல மாட்டார்கள். மும்மூர்த்திகளில் முக்கியமானவர் பிரம்மா ஆவார். அந்த சூட்சுமவதனத்தில் இருப்பவரோ சம்பூரண பிரம்மா ஆவார். தோற்றம் ஒன்று போல் தான் இருக்கின்றது. எனவே, உயர்ந்ததிலும் உயர்ந்தவர் சிவபாபா ஆகிவிட்டார், அவரே அனைவருடைய பாபா ஆவார். பிறகு, கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர் (பிரம்மா) என்ற மகிமை செய்யப்படுகின்றார். இவர் மூலம் மனித சிருஷ்டியின் வம்சம் தோன்றுகிறது. இது மனித சிருஷ்டி மரமாகும். முதன்முதலில் ஆதாம் அதாவது ஆதிதேவன், ஆதிதேவி, அவர்கள் மூலம் படைப்பு படைக்கின்றார். ஆனால், அனைவரும் பிரம்மா குமார், குமாரி ஆகிவிடு வதில்லை. யார் பிராமணன் ஆகிறார்களோ, அவர்களே பிறகு தேவதை ஆகிறார்கள். இது படிப்பு ஆகும். யக்ஞத்திற்குத் தேவையே பிராமணர்கள் தான். அந்த பிராமணர்கள் உலகாய யக்ஞத்தைப் படைக்கக்கூடியவர்கள் ஆவார்கள். உங்களுடையதோ ஆன்மிக யக்ஞம் ஆகும். அவர்களுடைய யக்ஞம் கொஞ்ச சமயத்திற்கு நடை பெறுகிறது. பிறகு இறுதியில் எள், நெய் போன்றவற்றை ஆகுதி (அர்ப்பணம்) செய்கிறார்கள். இதுவோ மிகப் பெரிய யக்ஞம் ஆகும். இதில் முழு உலகமும் ஸ்வாஹா ஆகப்போகிறது. சத்யுகம், திரேதாயுகத்தில் ஒருபொழுதும் யாகம் வளர்ப்ப தில்லை. அவர்கள் குழப்பங்களை அழிப்பதற்காக யக்ஞத்தைப் படைக்கின்றனர். துவாபர யுகத் திலிருந்து குழப்பங்கள் ஆரம்பமாகின்றன. இந்த யக்ஞத்திற்குப் பிறகு அரைக்கல்பம் வேறு எந்த யக்ஞமும் இருக்காது. எது சரியானது? என்று இப்பொழுது தீர்மானம் செய்யுங்கள் என்று புரியவைக்கப்படுகின்றது. இந்தச் சின்னச்சின்ன யக்ஞங்கள் அனைத்தும் எல்லைக்குட் பட்டவைகளே. இது எல்லைக்கப்பாற்பட்ட யக்ஞம் ஆகும். இந்த யக்ஞத்தில் ஆகுதி ஆகிவிடும். பிறகு, அரைக் கல்பத்திற்கு எந்த யக்ஞமும் நடைபெறாது. பூஜை செய்வ தற்கு எந்தக் கோவிலும் இருக்காது. கோவில்கள் உருவாகுவதே பக்தி மார்க்கத்தில் தான். எனவே, உயர்ந்ததிலும் உயர்ந்த சிவபாபாவை அனைத்து பக்தர்களும் நினைவு செய்கின்றனர். ஆனால், அறிமுகம் இல்லாத காரணத்தினால் தெரியாது, தெரியாது என்று சொல்கின்றனர். நாம் படைப்பு மற்றும் படைப்பாளருடைய கரை (எல்லை) காணமுடியாது. மேலும் பிறகு, பகவானே ! உங்களுடைய புத்தி, வழி தனிப்பட்டது, அதை நீங்களே அறிவீர்கள் என்று பாடுகின்றனர். அவசியம் ஒரு பொருள் இருப்பதனாலேயே நீங்களே அறிவீர்கள் என்று கூறுகின்றனர் அல்லவா ! அவசியம் பெயர், ரூபம் உடையவராக இருப்பார். அப்பொழுதே ஹே பகவான்! உங்களுடைய புத்தி, வழி தனிப்பட்டது என்று கூறுகின்றனர். ஆனால், மனிதர்கள் இதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளவில்லை. என்னுடைய வழி அனைத்தையும் விட தனிப்பட்டது என்று தந்தை புரியவைக்கின்றார். உங்களை சூத்திரனிலிருந்து பிராமணர் ஆக்கி பிறகு உயர்ந்த தேவதை ஆக்குகின்றேன். நான் ஜீவன்முக்தியை வழங்கும் வள்ளல் ஆவேன். நான் அனைவரையும் விடுவிக்கக்கூடியவர் ஆவேன். கலியுகம் முடிவடைந்து பிறகு சத்யுகம் வருகின்றது. சத்யுகத்தில் துக்கத்திற்கான விசயம் கிடையாது. தந்தை இப்பொழுது துக்கத்திலிருந்து விடுவிக் கின்றார். மற்ற அனைவரும் சாந்திதாமம் சென்றுவிடுவார்கள். கலியுகத்தின் இறுதியில் தான் விடுவிப்பவர் வருகின்றார். வந்து நரகத்தை சொர்க்கம் ஆக்குகின்றார். இங்கே அதிக துக்கம் உள்ளது. இதை சொர்க்கம் என்று கூறமுடியாது. பழைய உலகத்தைப் புதிய உலகம் என்று கூறமாட்டார்கள். புது உலகத்தில் இலட்சுமி, நாராயணருடைய இராஜ்யம் நடந்தது. பழைய உலகம் எப்படி ஆகிவிட்டது! இது பிறகு புதிய உலகம் ஆகிறது. உயர்ந்ததிலும் உயர்ந்த

பாபா தான் வந்து பழைய உலகத்திலிருந்து புதிய உலகம் ஆக்குகின்றார். சூட்சும வதனவாசிகளான பிரம்மா, விஷ்ணு, சங்கரரை தேவதைகள் என்று கூறுகின்றனர். பிரஜாபிதா பிரம்மா சூட்சும வதனத்தில் இருப்பவர் என்று எதிலும் எழுதப்படவில்லை. சூட்சுமவதனத்தில் பிரஜைகள் கிடையாது. பிரஜாபிதா பிரம்மா அவசியம் இங்கே தான் தேவை. உயர்ததிலும் உயர்ந்தவர் சிவபாபா, பிறகு, இரண்டாவது எண்ணில் உள்ளவர் பிரம்மா. சிவபாபா இந்த பிரம்மா மூலம் சேவை செய்கின்றார். பிராமணர்களை தேவதைகள் ஆக்கு கின்றார். இது பாவ ஆத்மாக்களின் உலகம், இராவண இராஜ்யம் ஆகும். என்னவெல்லாம் செய்கிறார்களோ, அதன் மூலம் மனிதர்களுக்கு பாவம் தான் சேர்கிறது, கீழான நிலையில் (பிரஷ்டாச்சாரிகள்) உள்ளவர்களிடம் கொடுக்கல் வாங்கல் இருக்கும். துவாபரயுகத்திலிருந்து பிரஷ்டாச்சாரம் ஆரம்பமாகிறது. பிறகு, இறுதியில் தந்தை வந்து மகான் சிரேஷ்டாச்சாரி (உயர்ந்தவர்) ஆக்குகின்றார். கலைகள் குறைந்து போவதற்கு 5 ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன. யார் உயர்ந்ததிலும் உயர்ந்த தேவதைகளாக இருந்தார் களோ, அவர்களே பிறகு கீழே இறங்குகின்றனர். இந்த விளையாட்டே அவ்வாறு உள்ளது. எவ்வளவு நல்ல முறையில் தந்தை அமர்ந்து புரிய வைக்கின்றார். யாராவது அமர்ந்து புரிந்துகொள்ள முயற்சித் தார்கள் என்றால் நல்ல முறையில் புரிந்துகொள்ள முடியும். நீங்கள் கராச்சியில் பட்டியில் இருந்தீர் கள், புரிந்துகொள்வதற்காக வந்தீர்கள். பிரிவினைக்குப் பிறகு அனைவரும் ஓடிவிட்டனர், நீங்களோ அங்கேயே இருந்தீர்கள். உங்களுக்கு யாருடைய தொடர்பும் இல்லாமல் இருந்தது. தொடர்பில் இருந்து விலகி இருந்தபோதிலும் வரிசைக்கிரமமான முயற்சி செய்தீர்கள். அனைவரும் ஒன்றுபோல் முயற்சி செய்யவும் முடியாது. பள்ளியில் கூட அனைவரும் ஒன்றுபோல் மதிப்பெண் (நம்பர்) பெறுவதில்லை. இரண்டு மாணவர்களுக்கு 99 மதிப்பெண்கள் கிடைக்க முடியாது. பள்ளியில் ஒருவர் மீது ஒருவர் அமரமாட்டார்கள். குதிரைகளின் பந்தயம் கூட நடக்கிறது, அதில் கூட ஒன்றுபோல் இரண்டு குதிரைகள் இருக்க முடியாது. இதற்கு இராஜஸ்வ அஸ்வமேத என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. குதிரையை அஸ்வம் என்று சொல்லப்படுகிறது. நீங்கள் ஆன்மிகக் குதிரைகள் ஆவீர்கள்.. முதலில் நாம் தந்தையை சென்றடைய வேண்டும் என்று வீட்டை நோக்கி உங்களுடைய ஓட்டம் உள்ளது. அங்கேயோ சைக்கிள், குதிரைப் பந்தயம் நடைபெறுகிறது. யுத்தத்தினுடைய பந்தயமும் நடைபெறு கிறது. உங்களுடையதோ யுத்தத்திற்கு யுத்தம், பந்தயத்திற்கு பந்தயமாக இருக்கிறது. உங்களுடைய யுத்தம் மாயையின் மீது வெற்றி அடைவதற்கான யுத்தம் ஆகும். மேலும், தந்தையை நினைவு செய்யவே கூறப்படுகின்றது. குருநானக்கை நினைவு செய்யுங்கள் அல்லது வேறு எவரையாவது நினைவு செய்யுங்கள் என்று கூறப்படுவதில்லை. அனைவருக்கும் சத்கதியைக் கொடுக்கும் வள்ளல் ஒருவர் ஆவார். உண்மையில் அனைவர் மீதும் கருணை காண்பிக்கக்கூடியவரும் ஒருவர் ஆவார். அனைவருக்கும் சத்கதியைக் கொடுக்கும் வள்ளல், பதீதபாவனர் கூட ஒருவர் ஆவார். அவர்கள் தனக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள் எனில் அது பொய் ஆகி விட்டது அல்லவா ! அனைவருக்கும் சுகத்தைக் கொடுக்கக்கூடியவர் ஒருவர் ஆவார். சுகதாமத்திற்குக் கூட தந்தை தான் அழைத்துச் செல்கின்றார். எனவே, தந்தையிடமிருந்து தான் சுகதாமத்திற்கான ஆஸ்தியைப் பெற வேண்டும். அரைக்கல்பத்திற்கு இராவணன் சாபம் கொடுத்துவிட்டார். இப்பொழுது தந்தையிடமிருந்து ஆஸ்தியை அடையுங்கள். இதுவோ பாவ ஆத்மாக்களின்

உலகம் ஆகும். தேவதைகளினுடையது புண்ணிய ஆத்மாக்களின் உலகம் ஆகும். பாவத்தின் உலகத்தில் புண்ணியம் இருக்காது. இன்னார் இறந்துவிட்டார், சொர்க்கவாசி ஆகிவிட்டார் என்று பொய் சொல்கின்றனர். அட, சொர்க்கம் என்பதே கிடையாது எனும்போது சொர்க்கத்தில் எவ்வாறு பிறப்பு கிடைக்கும்? இதைக் கூட புரிந்துகொள்ளக் கூடியவர்களே புரிந்துகொள்வார்கள். புரிந்துகொள்வதற்காக எவரும் இங்கேயே அமர்ந்துகொள்ள வேண்டியதில்லை. வெளிநாட்டில் கூட இருங்கள். ஆனால், 7 நாட்கள் பாபாவினுடைய தொடர்பில் அவசியம் இருக்க வேண்டும். ஏனெனில், நல்ல தொடர்பு கரை சேர்க்கும், தீய தொடர்பு மூழ்கடித்துவிடும். ஒருவேளை, அம்பு தைத்துவிட்டது என்றால் மேலும் 7 நாட்கள் இருக்க வேண்டும் என்று கூறுவார்கள். எனவே, தந்தை கற்பிக்கின்றார் என்ற முழுமையான நம்பிக்கை உள்ளதா, உள்ளம் ஈடுபடுகின்றதா, அம்பு தைக்கின்றதா என்று பாபா பரீட்சையும் வைப்பார். தந்தையிடம் இருக்க வேண்டும் அல்லவா. எப்பொழுது நல்ல முறையில் சாயம் படிந்துவிடுகிறதோ, அப்பொழுது வெளிநாட்டிற்குக் கூட செல்ல முடியும். இப்பொழுது தூய்மை ஆனீர்கள் என்றால் 21 பிறவிகளுக்கான இராஜ்யம் கிடைக்கும். இது சாதாரண விசயமா என்ன? ஒரு பிறவி தூய்மையாக ஆகுங்கள், இது ஒன்றும் பெரிய விசயம் அல்ல. பாபா யுக்திகளோ நிறைய சொல்கின்றார். கொஞ்சம் கொஞ்சம் யுக்தியோடு நடந்துகொள்ளுங்கள், இதனால் பிரச்சனை ஏற்படாது, நட்பும் இருக்கும் மேலும், தன்னைத்தான் விடுவித்துக்கொண்டேயும் இருங்கள். பாபா ஞானம் நிறைந்தவராக (யுக்தி நிறைந்தவராக) இருக்கின்றார் - இப்படி இப்படி செய்யுங்கள் என்று யுக்தி சொல்கின்றார். அனேகக் குழந்தைகள் (சகோதரிகள்) பூம், பூம் (ஞானத்தைச் சொல்லிச் சொல்லி) செய்து கணவனை அழைத்து வருகின்றனர். பிறகு, இவர் என்னைக் காப்பாற்றிவிட்டார் என்று கணவன் மனைவியின் சரணங்களில் (கால்களில்) விழுகின்றார். அந்த பிராமணர்களோ விகாரத்திற்கான கங்கணத்தை அணியச்செய் கிறார்கள். இங்கே பிரம்மா மற்றும் பிராமணர்கள் தூய்மையின் கங்கணத்தை அணிவிக்கிறார்கள். அதை ரத்து செய்கிறார்கள். பாபா நீங்கள் எங்களை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கின்றீர்கள். நாங்கள் உங்கள் சொல்லை ஏன் ஏற்றுக்கொள்ளமாட்டோம்! என்று குழந்தைகள் கூறவும் செய் கின்றனர். மகிழ்ச்சியுடன் தூய்மையின் கங்கணத்தை அணிந்துகொள்கின்றனர். நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகு காலத்திற்குப் பிறகு தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தை பாப்தாதாவினுடைய அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்காக முக்கியமான சாரம்:-

1. தூய்மை ஆகுவதற்கான யுக்தியை தானே உருவாக்க வேண்டும். 21 பிறவிகளுக்கான இராஜ்யத்தை அடைவதற்காக தூய்மையின் உறுதிமொழி எடுக்க வேண்டும்.

2. சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமானவர் (உயர்ந்ததிலும் உயர்ந்தவர்) ஆகுவதற்காக சிரேஷ்ட மானவர்களுடன் கொடுக்கல் வாங்கல் எடுக்க வேண்டும். பாபாவின் தொடர்பில் இருந்து பயமற்றவர் ஆக வேண்டும்.

வரதானம் சர்வ சக்திவானின் துணையின் நினைவு மூலமாக எப்பொழுதும்

: வெற்றியை அனுபவம் செய்யக் கூடிய (கம்பைண்டு) இணைந்த ரூபத்தில் இருப்பவர் ஆவீர்களாக !

சர்வ சக்திவான் தந்தையை தனது துணையாக ஆக்கிக் கொண்டீர்கள் என்றால் சக்திகள் எப்பொழுதும் கூடவே இருக்கும் மேலும் எங்கு அனைத்து சக்திகள் உள்ளனவோ அங்கு வெற்றி கிட்டாது என்பது ஏற்பட முடியாது ஆனால் நீங்கள் (கம்பைண்டு) இணைந்த ரூபத்தில் இருப்பதில் குறையுள்ளவராக இருந்தீர்கள் என்றால் மாயை கம்பைண்டு ரூபத்தை பிரித்து விடுகிறது. உழைப்பு செய்த பிறகு வெற்றி ஏற்படுகிறது. மாஸ்டர் சர்வ சக்திவானுக்கு முன்னால் வெற்றியோ முன்னாலும் பின்னாலும் சுற்றுகிறது.

சுலோகன்: அனைவருடைய ஆசிகள் பெற வேண்டும் என்றால், ஹான் ஜீ - (சரி ஐயா) என்று

கூறிய படியே ஒத்துழைப்பு என்ற கையை முன்னால் நீட்டிக் கொண்டே செல்லுங்கள்.